Registered as a Newspaper

A/L 86
PAPER CLASS
ஆரம்பம்
11 - 01 - 86
சனி பி. ப. 12-30 மணி
விபரங்களுக்கு;-
New Master Institute
BMC Lane, Jaffna.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/=

Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லைநாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure
Applied ]-Maths
-திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ மார்கழி மீ 26 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. அகிர் பிறை 28 (10-01-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:-45

# சித்திரவதையை நிறுத்த அவசர கோரிக்கை

## 2 ஆவது முறையாக டிச. 24 இல் மன்னிப்புச் சபை ஜனாதிபதி ஜே. ஆருக்கு அனுப்பிய மகஜர்

லண்டன் ஜன, 9

ஆயுதப்படையினர் நடத்தும் சித்திரவதை, துன்புறுத்தல்களை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இலங்கை அரசுக்கு சர்வதேச மன்னிப்புச் சபை இரண்டாவது தடவையாக இவ்வாறு அவசர வேண்டுகோள் விடுத்து உள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்த முதல் வேண்டுகோளை "அநீதியானது, ஒருபக்கச் சார்பானது, உண்மைக்குப் புறம்பானது" என்று கூறி இலங்கை அரசு நிராகரித்தது தெரிந்ததே.

இதைத் தொடர்ந்தே சர்வதேச மன்னிப்புச் சபை இரண்டாவது வேண்டுகோளை விடுத்துள்ளது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு இரண்டாவது வேண்டுகோளை டிசம்பர் 24 ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை அனுப்பி வைத்தது.

டிசம்பர் 30 ஆம் திகதி அந்த வேண்டுகோளின் பிரதிகள் உலகம் முழுவதும் உள்ள சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரிவுகள், சர்வதேச பத்திரிகையாளர்கள் ஆகியோருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### அக்டோபர் அறிக்கை

சர்வதேச மன்னிப்புச் சபை அக்டோபர் மாதத்தில் வெளியிட்ட சர்வதேச செய்திக் கடிதத்தில் இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைகள், துன்புறுத்தல் சம்பவங்கள் பற்றிய சத்தியக் கடதாசிகள் பிரசுரமாகியிருந்தன.

அவற்றை மறுத்தே இலங்கை அரசு அறிக்கை வெளியிட்டது.

4-12-85 இல் தான் இலங்கை அரசு, சர்வதேச மன்னிப்புச் சபையின் சித்திரவதைக் குற்றச் சாட்டுக்களை நிராகரித்து அரச அதிகாரிகள் அறிக்கைவெளியிட்டனர்

மன்னிப்புச்சபை இப்போது அனுப்பியிருக்கும் மகஜரில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஆயுதப் படையினரால் நடத்தப்படும் சித்திரவதை பற்றிய அறிக்கை லண்டனில் உள்ள சர்வதேச மன்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் வெள்ளத்துக்கு வயோதிபர் பலி

மட்டக்களப்பு.ஜன.10

பெரும் மழை காரணமாக மட்டக்களப்பில் ஏற்பட்ட வெள்ளத்தில் ஒரு வயோதிபர் மரணமானார்.

சத்துருக்கொண்டான் என்ற இடத்தில் இந்த வயோதிபரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சுமைதாங்கி என்னும் இடத்தில் வெள்ளத்தில் அள்ளுண்டு போன ஒருவரை ஊர்மக்கள் காப்பாற்றினர்கள்.

## தமிழாராய்ச்சி மாநாடு

### அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜன.10

1974 ஆம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர்நீத்தவர்களுக்கான அஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் நல்லூர் இந்து விடுதியில் நடைபெற உள்ளது.

பேராசிரியர் கு.நேசையா கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

நினைவு ஸ்தூபி இருக்கும் இடத்தில் அஞ்சலி செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தினால் தான் நல்லூர் இந்து விடுதியில் இம்முறை அஞ்சலிக் கூட்டம் நடத்தப்படுகின்றது.

இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயச் சடங்குகளும் இடம்பெறும்.

## அடை மழையிலும் தேடுதல் நடக்கிறது

### மட்டக்களப்பில் ஐவர் கைது

மட்டக்களப்பு, ஜன. 10

பெரு மழையிலும் ஆயுதப்படையினர் மட்டக்களப்பில் தேடுதல் நடத்தினர்.

அதிகார் வீதியைச் சுற்றி வளைத்து வீடு வீடாகத் தேடுதல் நடத்தி 5 இளைஞர்களைக் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணி அளவில் இத்தேடுதல் இடம்பெற்றது.

# அடகு வைத்தோர் ஊர்வலம் சென்றனர்

## நகை ஒப்படைப்பு திகதி கேட்டு

யாழ்ப்பாணம்.ஜன.10

மக்கள் வங்கியில் நகை அடகுவைத்த சுமார் 300 பேர் யாழ் பிரதான வீதியில் உள்ள மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகத்துக்கு நேற்று ஊர்வலமாகச் சென்றனர்.

அடைக்கலம் மாதா கோவிலில் இருந்து இந்த ஊர்வலம் சென்றது.

அடகு வைத்த நகைகளை திருப்பி ஒப்படைக்கும் திகதியை வெளியிடும்படி இவர்கள் மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளரிடம் கோரிக்கை விடுத்தனர்.

பிராந்திய முகாமையாளர் திரு. முத்துத்தம்பி கணேசசுந்தரம் உடனடியாக கொழும்புக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டார்.

நகைகளை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் கொழும்பு மக்கள் வங்கி அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நகைகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருவதில் ஏற்பட்டுவரும் தாமதத்துக்கு பாதுகாப்பு அமைச்சே காரணம் என்றும் கூறப்பட்டது.

இந்த விடயம்தொடர்பாக கொழும்பில் நேற்று மீண்டும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் மக்கள்வங்கி அதிகாரிகளும் பேச்சு வார்த்தை நடத்தினர்.

### சுபநேரம்

10 - 01 - 1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்

6.33 முதல் 8-33 வரை

ராகு காலம்

11 03 முதல் 12-33 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

கெர்ப்போட்டமுடிவு

அமாவாசை விரதம்

### முச்சந்திமுரளி



அப்ப பின்னை, அரசாங்கம் விடுகிற டூஸ் மழுப்பல்களை வெளியுலகம் நம்புறதில்லை எண்டது இப்ப தெரிய வருகுது.

அது நல்ல சகுனமடா, நழுவ விடலாமோ. . . . நாம் !

## யாழ். சம்பவம் நேற்றும் ஒருவர் மரணமானார்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ். நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அசம்பாவிதத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு ஆளான வி. மகேசன் நேற்றுக்காலை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

இவர் யாழ்ப்பாணவாசி.

ஞாயிற்றுக்கிழமை நடந்த சம்பவத்தில் மரணமானவர்கள் எண்ணிக்கை இதனையும் சேர்த்து 9 ஆக அதிகரித்துள்ளது.

### கூட்டணியின் மாற்றுயோசனைக்கு

# மாத இறுதியில் அரசின் பதில் இந்தியாவிடம்

கொழும்பு, ஜன. 10

தமிழர் விடுதலைக் கூட்டணி மாற்று யோசனைகள் பற்றிய முடிவை இலங்கை அரசு, ஜனவரி மாத இறுதியில் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்.

இத்தகவலை தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்,

கூட்டணியின் மாற்று யோசனைகள் அரசின் பரிசிலனையில் இன்னும் உள்ளன: இன்னும் சிறிது அதைப்படிப்போமே!

இப்படி அமைச்சர் லலித் அத்துலத்முதலி சொன்னார்.

வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாக இலங்கை அரசு ஏற்கனவே சொல்லிவிட்டது என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்:

## 'பேச்சுக்கு ஏற்ற சூழ்நிலை வந்துவிட்டது'

லண்டன், ஜன. 9

இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருப்பதாக இலங்கையின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி பி.பி.சிக்கு நேற்று முன்தினம் (புதன்கிழமை) அளித்த பேட்டி ஒன்றில் தெரிதார்.

கூட்டணியின் மாற்று யோசனைகளை அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அவர் தகவல் தந்தார்.

பேச்சு வார்த்தைக்கு

(4ம் பக்கம் பார்க்க)

## பிரி. பாதுகாப்பு அமைச்சர் ராஜினமா

லண்டன்,ஜன.9

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஹெசல் ரைன் தமது பதவியில் இருந்து ராஜினமாச் செய்தார்.

பிரிட்டனின் ஒரே ஹெலிக்கொப்டர் நிறுவனமான வெஸ்ட்லண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடியே இவரது ராஜினமாவுக்குக் காரணமாக அமைந்தது.

பிரிட்டிஷ் கோடீஷ்வரர்களில் ஒருவரான

(4ம் பக்கம் பார்க்க)

# பாரதம் உதவினலேயே கொலைகளை நிறுத்தலாம்

## தொண்டமான் கூறுகிறர்

சென்னை, ஜன. 9

வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் நசுக்கப்படாமல் இருக்க நிலையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இந்தியா உதவினல்தான் நாட்டில் இடம் பெறும் கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.

அமைச்சர் திரு. தொண்டமான்,இப்படிச் சொன்னதாக 'இந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

திரு. தொண்டமான் மேலும் சொன்னதாவது:

மலையகத் தமிழர் உரிமைக்காக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எடுக்கும் நேர்த்தியான எதிர் நடவடிக்கையே பிரார்த்தனை இயக்கம்.

திருபதி சிறிமாவோ பண்டார நாயக்காவுக்கு குடியுரிமை கிடைத்ததே இ. தொ. கா. வினல் தான்.

பிரார்த்தனை ஆண்டின் தொடக்கத்திலேயே பலன் கிடைத்து விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொள்கைகள் தமிழருக்கு நன்மை பயக்கா என்று நான் ஆரம்பத்திலேயே கூட்டணித் தலைவர்களுக்குக் கூறிவிட்டேன்.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

## ஆவரங்கால் அச்சுவேலி, புத்தூர் பகுதிகளில் நேற்று சோகமயம்

### பண்டிதருக்கும் ஏனையோருக்கும் அஞ்சலி

அச்சுவேலி, ஜன. 10

ஆவரங்காலில் சென்றவருடம் ஜனவரி 9ஆம் திகதி பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலின்போது உயிர் நீத்தவர்களின் முதலாண்டு நிறைவையொட்டி அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் நேற்று துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

வீதிகளில் கறுப்புக்கொடிகள், தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. தென்னை, சமுகு ஆகியவையும் கட்டப்பட்டிருந்தன.

இறந்தவர்களுக்கு அஞ்சலி தெரிவித்து துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

கம்பர் மலையைச் சேர்ந்த ரவிந்திரனின் (பண்டிதர்) மிகப்பெரிய உருவப்படம் ஆவரங்கால், அச்சுவேலி சந்தையடியில் வைக்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவத்தில் க. அருமைச்செல்வம், சி. அறுபுத்திரன், வ. ஆறுமுகம், திருமதி க. வள்ளிப்பிள்ளை, வ. சந்திரபவன், சி. பாலசுந்தரம், சி. மோகனதாஸ், அ. ஸ்ரீஸ்காந்தன் ஆகிய எட்டுப் பொதுமக்களும்—

திரு. ரவீந்திரன் (பண்டிதர்), ஆ. தவரத்தினம் (சாபி), சி. சிவேந்திரன் (சிவா), ந தவராசா (ராஜா), பிரதாபன்(ரஜீவ்), தில்லைச்சந்திரன் (நேரு) ஆகிய விடுதலைப் போராளிகளும் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்களவர் என அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன. 10

வவுனியா குருமண்காட்டுவளவுச் சந்தியில் மின்கம்ப மரணதண்டனை விதிக்கப்பட்ட நபர், ஒரு சிங்களவர் என்று அடையாளங் காணப்பட்டு உள்ளது.

28 வயதான அவரின் பெயர் திலகரட்ன என்று தெரிவிக்கப்பட்டது.

சின்னப்புதுக்குளம் பகுதியில் இவர் வசித்து வந்தார்.

### மேற்கு பெர்லினில்

## 5 தமிழருக்கு சிறைத்தண்டனை

மேற்கு பெர்லின், ஜன. 9

போதைப் பொருள் வைத்து இருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் ஐந்து இலங்கைத் தமிழருக்கு மேற்கு பெர்லின் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது.

முருகன் ரங்கநாதன் ஜெயகுமார், என்பவருக்கு 6 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் என்பவருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இராமையா கண்ணையா ராஜனுக்கும், சின்னத்தம்பி தியாகராஜாவுக்கும் தலா 4 ஆண்டு காலச் சிறைத்தண்டனையும்,

கமலேசன் சபாரத்தினத்துக்கு 3 வருடங்கள் 3 மாதச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது

### நஞ்சு கலப்புத் தகவல்:

# தேயிலையை பகுத்து ஆய தனிப் பிரிவு

கொழும்பு, ஜன 10

இலங்கைத் தேயிலை மாதிரிகளைப் பகுத்து ஆய்வதற்கு அரசாங்கம் பகுப்பாய்வுப் பகுதியில் தனியான பிரிவு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

அந்தப் பிரிவில் இப்போது தீவிர, பரிசோதனைகள் தொடர்ச்சியாக நடந்து வருகின்றன.

இதற்கிடையில், தேயிலையில் நஞ்சு கலக்கப்பட்டது வெறும் வெருட்டல்ல என்றும்—

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டால் என்னென்ன கேந்திரங்களில் நஞ்சு கலக்கப்பட்டது என்பதைத் தம்மால் இலச்சவாரியாகத் தரமுடியும் எனவும்—

தமிழ் ஈழ இராணுவம் அறிவித்திருக்கிறது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கமலைக் கவர்ந்த 'பொபி' புகழ் டிம்பிள்

''பொபி'' புகழ் டிம்பிள் கபாடியா ''சாகர்'' ஹிந்திப் படத்தில் கமலுடன் நடித்து இருந்தார்.

அவரது திறமையைக் கண்ட கமல் அவரைத் தனது ''விக்ரம்'' படத்திலும் புகுத்திக்கொண்டார்.

கமல் டிம்பிளைப் பற்றி குறிப்பிடுகையில் ''இந்தியத் திரையுலகில் யாருமே சாதிக்காததை டிம்பிள் கபாடியா சாதித்து இருக்கிறார்.

ஒரு கதாநாயகியாக அறிமுகமாகி, நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் கதாநாயகியாக அவரால் நடிக்க முடிந்திருக்கிறது.

திரையுலகில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் வரும்போது அவர்களுக்கு அம்மா வேடம் தான் காத்திருக்கும். இது திரையுலக வழமை.

இவ் வழமையை மாற்றி அமைத்தவர் டிம்பிள் தான்.

அன்று ''பொபி'' படத்தைப் பார்த்த போது ராஜ்கபூர் தான் எனக்குப் பிரமாண்டமாய்த் தெரிந்தார்.

இரண்டாவது, மூன்றாவது முறை 'பொபி'யைப் பார்த்த போது தான், அதன் அழகு ராணி ''டிம்பிள் கபாடியா'' என் கவனத்திற்கு வந்தார்.

அண்மைக்கால நடிகைகளில் மிகக் கடினமாக உழைப்பதிலும் இரவு பகல் பாராது பாடுபடுவதிலும் இவரை யாரும் நெருங்க முடியாது.

அவர் தமிழ்ப் படங்களில் நடிக்கவேண்டும் என்று விரும்பியதே இல்லை. ஆனால் ''விக்ரம்'' படத்தில் நடிக்க வேண்டும் என்று அவரைக் கேட்ட போது, எவ்வித மறுப்பும் இன்றி உடனே சம்மதித்து விட்டார்.

இந்தப் படத்தில் வரும் ஒரு கேரக்டருக்கு இவர் தான் பொருத்தமானவர் என்று மனதிற்குப் பட்டதால் தான், நான் அவரை அணுகினேன்'' என்றார் கமல்.

தினசரி சினிமா

### அம்பிகாவின் மீன் சுவை

படப்பிடிப்புக்குச் செல்லும் வழியில் அம்பிகா சாப்பிட்டுச் சுவைத்ததைச் சுவையாகச் சொன்னார்.

''ஆலப்புழையிலிருந்து எர்ணாகுளம் போகும் வழியில ''கற்பவாடி இன்'' என்ற ஓர் இடம். அங்கே ''கறி மீன்'' ஒரு ஷ்பெஷல் ஐட்டம்.

நாம் ''ஆர்டர்'' கொடுத்தவுடன் உயிருடன் மீனைப்பிடித்துச் சுத்தம் செய்து கறி செய்து கொடுப்பார்கள். இந்த இடத்தைக் கடக்கும் போதெல்லாம் இறங்கி, சாப்பிடாமல் போக மாட்டேன்'' என்றார்.

## மொறிஷியஸ் தேசாதிபதியாக ஒரு தமிழர்

புதுடில்லி, ஜன.9

மொறிஷியஸ் நாட்டின் தேசாதிபதியாக தமிழரான திரு. வீராசாமி நியமனம் பெற்றுள்ளார்.

இவர் மொறிஷியஸ் அமைச்சரவையில் நிதிய மைச்சராக நீண்டகாலம் தொடர்ந்து பணியாற்றியுள்ளார்.

# றேகன் போர் பிரகடனம் செய்துவிட்டார்

### -கடாபி கருத்து

திரிப்போலி, ஜன. 9

**லிபியாவுக்கெதிராக அமெரிக்காவுடன் ஒத்துழைக்குமாறு சர்வதேசிய ரீதியில் றேகன் விடுத்துள்ள வேண்டுகோள் எமது நாட்டுக்கெதிரான போர்ப் பிரகடனத்துக்கு ஒப்பாகும்.**

மேற்கண்டவாறு கேர்னல் கடாபி கருத்து வெளியிட்டுள்ளார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் உரையாற்றிய லிபிய ஜனாதிபதி மேலும் தொடர்ந்து கூறுகையில்;

லிபியாவைத் தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் திட்டமும் பிரயத்தனங்களும் படுதோல்வியடைந்து விட்டன.

இராணுவத் தாக்குதலொன்றை லிபியா மீது மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது.

அப்படியொரு தாக்குதல் மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தகுந்த பதிலடியைக் கொடுக்க எமது நாடு ஆயத்தமாகவே இருக்கிறது என்றார்.

லிபியா மீதான வர்த்தக பொருளாதார தடையுத்தரவை அமெரிக்கா ஏற்கனவே பிறப்பித்து விட்டது.

அமெரிக்காவிலுள்ள லிபிய பொருளாதாரத்தை முடக்கி வைக்குமாறு மேலும் புதியதொரு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, அமெரிக்க தாக்குதல் திட்டத்தைக் கருத்திற் கொண்டு லிபியா தனது வானப் பிராந்தியத்தை தடைசெய்து விட்டதாக அறிவித்தது தனது விமானதளங்களையும் மூடிவிட்டதாக மேலும் அறிவித்திருந்தது.

பாதுகாப்புக் கருதி லிபியாவின் பல பகுதிகள் இரவு நேரங்களில இருளுக்குள் மறைக்கப்படுவதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

லிபியா மீது அமெரிக்கா மோசமான போக்கைக் கடைப்பிடிப்பதாக சோவியத் ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டன் றேகனின் வேண்டுகோளை நிராகரித்து விட்டதாக அறிவித்தது.

அமெரிக்க நடவடிக்கைகளுக்கெதிராக ஈரானும், பலஸ்தீன விடுதலை இயக்கமும் லிபியாவுக்கு தமது முழு ஆதரவையும் வழங்கப்போவதாக அறிவித்துள்ளன.

### விமானக் கடத்தலை

## எதிர்த்துத் தாக்க புதிய உத்தி

### குவைத் தயாரிப்பதாக தகவல்

புதுடில்லி, ஜன.9

விமானக் கடத்தல்களைச் சமாளிப்பதற்கும் இதில் ஈடுபடும் தீவிரவாதிகளை முறியடிக்கவும் குவைத் புதிய போர் உற்பத்திகளைக் கண்டுபிடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்காக விசேஷ பயிற்சி பெற்ற படைப் பிரிவொன்று இந்தப் பயிற்சிகளைத் தீவிரமாகப் பெற்று வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்ட விமானங்களை எப்படித் தாக்குவது என இந்தக் குழுவுக்கு பயிற்சிகள் கொடுக்கப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பெய்றூட்டிலுள்ள இஸ்லாமிய ஜெஹாட் ஸ்தாபனம் குவைத்துக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகக் குவைத் குற்றம் சாட்டியுள்ளது.

ஜெஹாட்டின் இந்த நடவடிக்கைகளுக்கெதிராகவே குவைத் தனது தாக்குதல் உத்திபற்றி திட்டமிடுவதாக நம்பப்படுகிறது.

# பிலிப்பீன்ஸ் தேர்தலில்

## ஜனநாயகம்- கம்யூனிசம் மோதல் என்கிறார் மாக்கோஸ்

பிலிப்பீன்ஸ் ஜன,10

பிலிபீன்ஸில் நடைபெறும் தேர்தல் போராட்டம் எனக்கும் திருமதி அக்கியூனோவுக்கும் இடையில் நடைபெறும் ஒரு வெறும் போராட்டம் அல்ல இது ஜனநாயகத்துக்கும் கம்யூனிசத்துக்கும் இடையில் நடைபெறும் பெரும் மோதலாகும்.

மேற்கண்டவாறு பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பேடினன்ட் மாக்கோஸ் தெரிவித்துள்ளார்.

குலெஸோன் மாகாணத்தில் தேர்தல் கூட்டமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில் காலஞ்சென்ற அக்கியூனோ கம்யூனிஸ்ட்டுகளுடன் இரகசியத் தொடர்புகளை வைத்திருந்தார். இதைத் திருமதி அக்கியூனோ மறுத்துப் பொய் கூறி வருகிறார்.

1983 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட அக்கியூனோ பிலிப்பீன்ஸ் புதிய மக்கள் இராணுவத்தை அமைப்பதற்கு நிதியுதவி செய்தார். அதை அமைப்பதற்கும் அவரே பின்னணியில் இருந்தார். ஆயுத உதவிகள் கிடைக்கவும் அவரே வழி செய்தார்.

பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் உள்ளமைப்பாக இந்த இராணுவம் இயங்கி வருகிறது

பிலிப்பீன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியை அமைத்தவர் தனது கணவரே எனத் தெரிந்திருந்தும், தனது கணவர் ஒரு கம்யூனிஸ்ட் ஆதரவாளர் அல்ல என்று மறுத்து வருகிறார் திருமதி அக்கியூனோ என்றார்.

திருமதி அக்கியூனோ தனது தேர்தல் பிரசாரங்களை சூறாவளி வேகத்தில் நடத்தி வருவதாகக் கூறப்படுகிறது. அவரது கூட்டங்களுக்கு மக்கள் தொகையாகத் திரள்கிறார்கள்.

பிராந்தியவாதத்தை மக்கள் கைவிட்டு மாக்கோஸ் அரசுக்கெதிராகத் தனக்கு ஆதரவளிக்குமாறு அவர் கேட்டு வருகிறார்.

## எங்கும் உலகில்

## வறுமையைப் போக்க மக்கள் எழவேண்டும்

### ராஜீவ்காந்தி அழைப்பு

சென்னை, ஜன.9

வறுமை, பின்தங்கிய நிலைகள் ஆகியவற்றை இல்லாமற் செய்ய மக்கள் தயாராக வேண்டும். இதற்காக மக்களனைவரும் தமது சக்தியைத் திரட்டி போராட முன்வரவேண்டும்.

மேற்கண்டவாறு பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சென்னையில் நடந்த பொதுக்கூட்டமொன்றிற் பேசுகையிலேயே இந்த வேண்டுகோளை அவர் விடுத்தார்.

பிரதமர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

பாரதம் தொழில்நுட்பத்துறைகளில் வளர்ச்சியடைவது மட்டும் போதாது. வறுமையையும் பின்தங்கிய நிலைகளையும் போக்க மக்கள் உழைக்க முன்வரவேண்டும்.

குடியேற்றவாத ஆதிக்கத்துக்குள் 200 ஆண்டுகளாக அகப்பட்டு நலிவடைந்து கிடந்தது பாரதம்.

இந்த நிலையிலிருந்து விடுபட்டு தனது சொந்தக் கால்களில் நிற்கவும் தனது பாதையை நிர்ணயிக்கவும் போராடி வென்றது.

பாரதத்தின் பெருமை அதன் செழிப்பான கலாசார மரபில் வந்ததாகும்.

தேசிய நலனுக்காக பலவித கலாசாரங்களை பேணுவதிலும் மதிப்பதிலும தான் எமது எதிர்காலம் தங்கி இருக்கிறது.

நாட்டின் வசதியற்ற தூர இடங்களில் வாழும் மக்கள் பயனடைய நாம் முன்வந்து உழைக்க வேண்டும்.

இவ்வாறு காந்தி தெரிவித்தார்.

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### காங்கேசன் ஐயனார் கோவிலடி

## இந்து மயானத்தை பயன்படுத்த இடைஞ்சல் ஏற்படுமா?

காங்கேசன்துறை,ஜன10

காங்கேசன்துறை ஐயனார் கோவிலடியில் உள்ள இந்துக்களது மயானத்தை பொது மக்கள் உபயோகிக்க இடைஞ்சல் ஏற்படுமா?

இவ்வாறு அச்சம் தெரிவிக்கபபடுகிறது.

இது குறிதது உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

காங்கேசன்றுறை ஐயனார் கோவிலடியல் உள்ள இந்துக்களது மயானத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் (மயானம் உட்பட) பாதுகாப்புப் படையினரால் முட்கம்பி வேலிகள் போடப்பட்டு தடை செய்யப்படுவதை அடுத்தே மேற்கண்டவாறு அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏராளமான இந்து மக்கள் இந்த மயானத்தை உபயோகித்து வருகின்றனர்.

அங்கு சென்று சடலங்களை தகனம் செய்வதற்கு இடைஞ்சல் ஏற்பட்டால் சடலங்களை எங்கு தகனம் செய்வது? இப்படி இப்பகுதி பொது மக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இதுவிடயம் குறித்து இப்பகுதியில் உள்ள பொது நல நிறுவனங்கள் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளன.

### வடக்கு கிழக்கிற்கு அத்தபத்து வருவாரா?

கொழும்பு, ஜன.10

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அகதி முகாம்களின் சுகாதார நிலைமை பற்றி நேரில் பார்வையிட சுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து தீர்மானித்துள்ளார்.

விரைவில் இம்முகாம்களுக்கு அமைச்சர் செல்ல இருப்பதாகத் தெரிகின்றது.

### படை வீரர்களுக்கு ஊன்றுகோல்

கொழும்பு, ஜன.10

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம் பெற்ற வன்செயல்களில் காயமடைந்த ஆயுதப்படை வீரர்களுக்கு நேற்றுமுன்தினம் ஊன்று கோல்கள் வழங்கப்பட்டன.

கொழும்பு பெரியாஸ் பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் இந்தப் படை வீரர்கள் நடக்க முடியாத நிலையில் உள்ளனர்.

தேசிய பாதுகாப்பு அமைச்சரின் மனைவி திருமதி சிறிமானி அத்துலத் முதலி, ஆஸ்பத்திரிக்கு நேரில் விஜயம் செய்து ஊன்றுகோல்களை வழங்கினார்.

# யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு நியாய கட்டணத்தில் விடுதி

## குடியிருப்பாளருடனான சந்திப்பில் இணக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நியாயமான கட்டணத்தில் விடுதி வசதி வழங்க அச்சுற்றுடலில் உள்ள பல குடியிருப்பாளர்கள் முன்வந்துள்ளனர்.

பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் குடியிருப்பாளர்கள் சந்திப்பில் இந்த இணக்கம் காணப்பட்டது.

மாணவர்களுக்கு போஷாக்கு உள்ள உணவு வழங்கப்பட வேண்டும் என்பதைப் பல்கலைக்கழக வைத்திய அதிகாரி திருமதி. எஸ், நித்தியானந்தன் இச்சந்திப்பின்போது வலியுறுத்தினார்.

துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன், பதிவாளர் திரு. வி. என். சிவராசா, மேலதிக பதிவாளர் திரு. எஸ் வி. யோகநாதன், சிரேஷ்ட மாணவ ஆலோசகர் பேராசிரியர் எஸ். மகேஸ்வரன் உட்படப் பலர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு விடுதி வசதி செய்து கொடுக்க முன்வந்துள்ள குடியிருப்பாளர்களின் பெயர் முகவரி கொண்ட பட்டியல் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்டு உள்ளது.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ் பல்கலைக் கழக புவியியல் துறை விரிவுரையாளர் திரு. எஸ் ரி. பி. இராஜேஸ்வரன் எழுதிய 'விமான ஒளிப்பட விளக்கங்களுக்கான மூலாதாரங்கள்' என்ற நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெறுகின்றது.

யாழ் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல் நடைபெறும் இவ்விழாவில் யாழ் பல்கலைக் கழகக் கலைப்பீடாதிபதி திரு. என். பாலகிருஷ்ணன் வெளியீட்டு உரை நிகழ்த்துகின்றார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் முதல் பிரதியைப் பெற்றுக் கொள்வார்.

நிகழ்ச்சிக்கு பல்கலைக் கழகப் புவியியல் துறைத் தலைவர் திரு எஸ். பாலச்சந்திரன் தலைமை வகிப்பார்.

துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைப்பார்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராஜா வரவேற்புரை நிகழ்த்துவார்.

புவியியல் துறை சிரேஷ் – விரிவுரையாளர் கலாநிதி ஆர் மதனகரன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

கலாநிதி வி. நித்தியானந்தன் (தலைவர், பொருளியல்துறை) திரு. கே. எம். புவனேஸ்வரன் (விரிவுரையாளர், புவியியல்துறை), கலாநிதி எஸ். கிருஷ்ண [illegible] (தலைவர், மெய்யியல் துறை) ஆகியோரும் பேசுவர்.

### குருமண்காட்டில் மின் கம்ப மரண தண்டனை

யாழ்ப்பாணம், ஜன 10

வவுனியா - மன்னார் வீதியில் குருமண்காடு என்னும் இடத்தில் இனந் தெரியாத ஒருவருக்கு மின்கம்ப மரண தண்டனை விதிக்கப்பட்டது.

தலையில் சூட்டுக்காயம் காணப்பட்டது.

[illegible] காணப்பட்டது அதில் [illegible] எழுதப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

### மந்திகை ஆஸ்பத்திரிக்கு இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஜன 10

மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு இரத்தம் தேவைப்படுகிறது. பொதுமக்கள், பொது நல ஸ்தாபனங்கள் முன் வந்து இரத்ததானம் வழங்க வேண்டும்.

உடுப்பிட்டி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. கே ஈசுரபாதம், துன்னாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. ஏ. வி தங்கராசா ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள வேண்டுகோளில் இவ்வாறு கோரியுள்ளனர்.

### அணிநடையில் முதலிடம்:

## அராலி இந்துவுக்கு

### கல்வி அதிகாரி பாராட்டு

வட்டுக்கோட்டை, ஜன. 10

வட்டுக்கோட்டை வட்டாரத்தில் ஏராளமான உடற் கல்வி ஆசிரியர்கள் இருந்தும் உடற்கல்வி ஆசிரியர் இல்லாத ஒரு கல்லூரி மிகச் சிறந்த அணிநடையை நடத்திக் காட்டி முதற் பரிசைத் தட்டிக்கொண்டது பாராட்டத்தக்கதாகும்.

வட்டுக்கோட்டை வட்டார அணிநடைப் போட்டி சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் நடைபெற்றது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய கல்வி அதிகாரி (உடற்கல்வி) திரு. வி. தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

ஏனைய வட்டாரங்களை விட வட்டுக்கோட்டை வட்டாரத்திலேயே உடற்கல்வியில் விசேஷ பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அதிகமாக உள்ளனர். இருந்தும் இவ் ஆசிரியர்கள் இல்லாத அராலி இந்துக் கல்லூரி அணிநடைப் போட்டியில முதலிடம் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## வடபிரதேச

### தொழிற் சங்கக் கூட்டுக்குழு

### ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தும்

யாழ்ப்பாணம், ஜன. 10

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழு, தான் முன்வைத்துள்ள ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளளது.

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுவில் அங்கம் வகிக்கும் பதின்மூன்று தொழிற் சங்கங்களும், ஐந்து அம்சக் கோரிக்கைகளை அங்கீகரித்து உள்ள வெகுஜன இயக்கங்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் பங்குபெற உள்ளன.

வடபிரதேச தொழிற் சங்கக் கூட்டுக் குழுத் தலைவர் திரு எஸ் விஜயானந்தன் தலைமையில் இருமுறை கூடி இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

அன்னையர் முன்னணி, தமிழ் மகளிர் பேரவை, பிரஜைகள் குழுக்கள், சமூகங்களுக்கு இடையிலான சமத்துவம், நீதிக்கு ஆன இயக்கம் ஆகியவை இவ்வூர்வலத்தில் பங்குபெற உள்ளன என்று தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## பூஸா செல்லும் பார்சல்கள் வெறுமையாக திரும்பி வருகின்றன

நல்லூர், ஜன. 9

பூஸா முகாமுக்கு அனுப்பப்படும் உடுப்பு பார்சலகள் திரும்பி வருகின்றன. உடுப்பு எதுவும் இன்றி வெறும் பார்சல்களாகவே அவை வருகின்றன.

கோப்பாயைச் சேர்ந்த தாய் ஒருவர் பூஸாவில் இருக்கும் தமது மகனுக்கு பல உடுப்புப் பார்சல்களை அனுப்பி வந்தார்.

இவர் கடைசியாக கடந்த வாரம் அனுப்பிய உடுப்புப் பார்சல்கள் இவருடைய முகவரிக்கே திரும்பி வந்தன.

இவர் அனுப்பிய பார்சல்களினுள் இருந்த சேர்ட், சறம், சவர்க்காரம் களவாடப்பட்டு மகனுக்கு வைத்த கடிதத்துடன் வெறும் பார்சல் மட்டுமே இவருக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

### யாழ். மாவட்டத்திலுள்ள

## வீதிகளைதிருத்துவதற்கு கொழும்பில் மாநாடு

யாழ்ப்பாணம்,ஜன.10

யாழ். மாவட்ட வீதிகள் திருத்தம், பராமரிப்பு பற்றி இன்று (வெள்ளிக்கிழமை) கொழும்பில் மாநாடு ஒன்று கூட்டப்படவுள்ளது பெருந்தெருக்கள் அமைச்சுச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம் இம் மாநாட்டைக் கூட்டியுள்ளார்.

யாழ் மாவட்டத்துக்கு வீதிப் பராமரிப்பு, திருத்தங்களுக்கு என்று 1986இல் 75 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சி டி.தர வீதிகள் பராமரிப்பது, திருத்துவது மாவட்ட அபிவிருத்திச் சபையின்கீழ் வருவதால், அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கொழும்பு மாநாட்டில் கலந்து கொள்கின்றார்.

ஏ, பி. தர வீதிகளின் திருத்தவேலைகள், பராமரிப்பு பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

மாவட்ட அபிவிருத்திச்சபை விதிகளைப் பராமரிப்பது திருத்துவதற்கு ஏற்ற சூழ்நிலை யாழ். மாவட்டத்தில் உள்ளதா என்பது பற்றியும் இம் மாநாட்டில் ஆராயப்படலாம் என்று கூறப்படுகின்றது.

ஒரு தொகுதிக்குஏழரை லட்சம் ரூபா வீதம் 10 தொகுதிகளுக்கு 75 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

இறைமைகளை,
இயற்கைத் தாவரங்கள் போன்றவை.
தாவரங்களை வெட்டி வெட்டி வளர்ப்பது போல,அறிவை வளர்த்துச் சொல்வதன் மூலம் இறைமைகளை விருத்தி செய்து சொள்ளவேண்டும்.

--பேகன்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல. 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805 22073
10-01 86 த. பெ. 23

## ஜனவரி பத்தாம் நாள்

இன்று ஜனவரி பத்தாம் நாள். இலங்கைத் தமிழர் வாழ்வில் நினைவு அழியா நாள். இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் இளைஞர்களின் உணர்வு ஊற்றைத் திறந்த பெருமை ஜனவரி பத்தாம் நாளுக்கு உண்டு.

1974 ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடந்த நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு சரித்திரச் சிறப்பு வாய்ந்த ஒன்று. மக்கள் உள்ளம் எல்லாம் தமிழ் உணர்வும், பற்றும் பொங்கிப் பிரவகித்தது ஒருபுறம். யாழ். நகரம் இந்திரவிழா போலத் தமிழ் விழாக் கொண்டாடியது மறுபுறம்.

தேன் தமிழை ருசித்த களிப்பில் இருந்தவர்கள் எதிர்பாராத விதமான தாக்குதலால் அல்லோலகல்லோலப்பட்ட பெரிய அளவிலான முதற் சம்பவமும் அது தான். மக்களைப் பாதுகாக்க வேண்டிய படையினரே தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த கன்னிச் சம்பவமும் அது தான்.

அடங்கிக் கிடந்த தமிழன், தருவதை வாங்கிக் கொள்ளும் மனோபாவத்துடன் இருந்த தமிழன், தன் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இனியும் காத்திருக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியதும் 1974 ஜனவரி பத்தாம் நாளே.

திருமதி சிறிமாவோ தலைமையில் ஆட்சி நடத்திய கூட்டரசாங்கம் தமிழர்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விடத் தொடங்கிய காலம் அது. அதன் ஒரு கட்டமாகத் தான் பத்துத் தமிழர்கள் ஜனவரி பத்தில் உயிரிழந்தார்கள் அதுவே தமிழர் தமது உரிமைகளைப் பெறுவதற்காக உயிர்த்தியாகம் செய்த ஆரம்ப நாளாகவும் மாறியது. அதன் தொடர் தான் இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

உயிர்த்தியாகம் இன்றி உரிமை கிடைத்ததாகச் சரித்திரம் இல்லை. இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்டத்தில், பெரும் எண்ணிக்கையில் உயிர்த்தியாகம் செய்யத் தொடங்கிய ஆரம்ப நாள் ஜனவரி பத்தாம் நாளே.

பத்துத் தமிழர்கள் துடி துடித்துச் செத்த போதுங்கூட நீதி விசாரணைக் கமிஷன் அப்போது நியமிக்கப்படவில்லை. தனிப்பட்ட முறையில் தான் கிறெஸ்டர்குழு நியமிக்கப்பட்டது. அதன் மூலம் அப்பாவித் தமிழர் பத்துப் பேர் அநியாயமாக உயிர் பறிக்கப்பட்ட விடயம் உலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.

1974 ஜனவரி பத்தில் பத்துத் தமிழர்கள் தான் கொலை செய்யப்பட்டார்கள். இப்போது ஒவ்வொரு நாளும் ஜனவரி பத்தாம் நாளாக மாறிவிட்டது. அதனை விசாரிக்க ஒரு சர்வதேசக் கமிஷனே தேவை.

ஜனவரி பத்தாம் நாள் கொலையுண்ட தமிழர்களுக்கு நாம் வருடாந்தம் அஞ்சலி செலுத்துகிறோம். ஆயின், இப்போது தினமும் கொலையுறும் தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்துவது எப்போது? எப்படி?

அதற்கும் ஒரு காலம் வரும் என நம்புவோம்

## யாழ் தபால் நிலையம் இடம் மாற்ற மகஜர்

### கொலைக்களத்தில் கடமை ஆற்றும் உணர்வு ஊழியருக்கு

யாழ்ப்பாணம், ஜன 10

பிரதம தபால் நிலையத்தை வேறு இடத்துக்கு மாற்றும்படி கோரி யாழ் பிரதம தபால் நிலைய நிர்வாகம், தபால் மா அதிபருக்கு முறையிட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள், யாழ் அரசாங்க அதிபர், யாழ் பிரஜைகள் குழுத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எந்த நேரம் என்ன நடக்குமோ என்பது தெரியாத நிலையில் பதற்றத்துடன் 250 க்கு அதிகமான ஊழியர்கள் பணிபுரிய வேண்டியுள்ளது என்றும் மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி முன்புறமாக இருந்த கருமபீடங்கள், பின் புறமாக இடமாற்றஞ் செய்யப்பட்டு இயங்குகின்றன.

எப்படிச் செய்தாலும், பொதுமக்களும் தபால் அலுவலக ஊழியர்களும் தபால் அலுவலகம் செல்வதே 'கொலைக்களத்'துக்குச் செல்வது போல் உள்ளதாம்.

தபால் அலுவலகத்தில் முன்னுக்கு இருந்து பணியாற்றினாலும் சரி, பின்னுக்கு இருந்து பணியாற்றினாலும் சரி சூடு தாக்கினால் எல்லா இடங்களுக்கும் பிடிக்கும்.

இதுவே தபால் அலுவலக ஊழியர்கள் எழுப்பும் அவலக் குரல்.

### அகதிகளுக்கு அன்பளிப்பு

கிளிநொச்சி, ஜன. 10

ஐக்கிய நாடுகள் நிதியம், றெட்பாணா, போருட் சர்வோதயம் ஆகியன ஒன்று இணைந்து கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அகதிகளுக்கு 750 பால் மா பக்கெட்டுகள் 250 கிலோ மைசூர் பருப்பு ஆகியவற்றை சர்வோதய அமைப்புமூலம் அனுப்பி வைத்திருக்கிறது.

# மனத் தூய்மை இல்லாமல் கோயிலுக்குச் செல்லாதே

## புனிதத் தன்மைக்கு பங்கம் விளைவித்த பாவமும் சேரும்



அன்பே சமயம், தூய உள்ளன்பிலன்றி புறச் சடங்குகளில் சமயம் நிலைப்பதில்லை.

உடல் சுத்தமும், உள்ளத் தூய்மையுமின்றிச் சிவபெருமானை வழிபடுதலில் பயனில்லை. சுத்தமான உடலுடனும் தூய்மையான உள்ளத்தோடும் சிவபெருமானை வழிபடுவோருடைய பிரார்த்தனைகளே செவிசாய்க்கப் பெறும்.

தூய்மை அற்றவரும் பிறருக்கு சமயபோதனை செய்ய முயல்கின்றனர். ஆனால் இறுதியில் அவர்களது முயற்சி தோல்வியுறும் புறவழிபாடு, உளங்கனிந்த பக்தியின் ஒரு சின்னமேயாகும். பக்தியும் தூய்மையுமின்றிப் புற வழிபாட்டினால் பயனில்லை.

இக்கலியுகத்திலே மக்கள் மிகவும் தரம் கெட்டவர்களாக மாறினதுமன்றி, எத்தகைய பாதகச் செயல்களையும் எவ்வாறு வேண்டுமானாலும் செய்துவிட்டுப் பின் க்ஷேத்திராடனம் போன்றவைகளில் தங்களை ஈடுபடுத்தித் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ள முயல்கின்றனர்.

மனத்தூய்மையின்றிக் கோயிலுக்குள் சென்றால், அவன் ஏற்கனவே செய்துள்ள பாவங்களோடு, கோயிலின் புனிதத் தன்மையைப் பங்கப்படுத்த முற்பட்ட மற்றொரு பாவத்தையும் செய்தவனாகின்றான். ஆகவே அவன் தன் வீட்டை விட்டுக் கோயிலுக்குப் புறப்படும் பொழுது இருந்ததைவிட இன்னும் இழிந்த நிலையில்தான் ஆலயத்திலின்றும் வீட்டிற்குத் திரும்புகிறான்.

தீர்த்தமாடும் க்ஷேத்திரத்தில் அனேக புனித வஸ்துக்களும், பரிசுத்தமான ஞானிகளும் உறைகின்றனர், சாதாரணமான ஓர் இடத்தில் புரிந்த பாவத்தை எளிதில் போக்கிக்கொள்ள முடியும். ஆனால் தீர்த்தஸ்தலம் போன்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் புரியும் பாவத்தைப் போக்க வழி யாதுமில்லை.

எல்லாவித வழிபாட்டின் சாரமாவது, தூய

**சுவாமி விவேகானந்தர்**

வாழ்வு வாழ்வதும், பிறருக்கு நன்மை புரிவதும் தான். ஏழை எளிய மக்கள் நோயுற்ற மக்கள் இவர்களிலே சிவத்தைக் காண்பதுதான், உண்மையான சிவ வழிபாடு. விக்கிரகங்களில் மட்டும் சிவ ஜைக்காண முயலுவது வழிபாட்டின் பூர்வாங்கமேயாகும்.

கோயிலில் மட்டும்

> 27 - 1 - 1897 அன்று சுவாமி விவேகானந்தர் இராமேஸ்வரம் கோயிலில் நிகழ்த்திய அருளுரை இன்று பிரசுரமாகிறது.
>
> நன்றி: ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சிவத்தைக் காண விழைகிறவனைக் காட்டிலும், ஜாதி, மதம், மற்ற யாதொரு பேதமின்றி டாமர ஏழைகளிடம் கடவுளைக் கண்டு, அவர்களை அழைத்துச் சேவை செய்து உதவி புரிகிறவன் தான் சிவபெருமானின் இன்னருளுக்குப் பாத்திரமாகிறான்.

சிவபெருமானுக்குச் சேவை செய்ய விரும்புபவன் அவனுடைய படைப்புக்களாகிய உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளுக்கும் சேவை செய்யமுற்படவேண்டும்.

சிவனடியார்களுக்கும் சிருஷ்டியிலுள்ள அனைத்துக்கும் செய்யும் சேவை தான் சிவபெருமானுக்குச்செய்யும் சேவையென சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆதலால் இந்த உண்மையை நீங்கள் தெளிவாய் உணர வேண்டும்.

மீண்டும் நான் உங்களுக்குக் கூறுவதாவது: உங்களை நாடிவரும் எவருக்கும், உங்கள் சக்திக்கு இயன்றவரை உள்ளக் கனிவுடன் உதவி புரிய வேண்டும். இந்த குணத்தினால் தான் உங்கள் உள்ளம் தூய்மையடைந்து சித்த சுத்தி அடைய முடியும்.

அப்பொழுது எங்கும் நீக்கமற நிறைந்தவரான சிவபெருமான் நம்மிடத்திலுறைவதையும் உணர

**ஞானக்கதிர்**

முடியும். அவர் எப்பொழுதும் யாவருடைய உள்ளத்திலும் குடிகொண்டுள்ளார்.

சுயநலம் மிக்கவனாக இருப்பவன் பாபி. தன்னுடைய நலன்களையும் முன்னேற்றத்தையும் நல்வாழ்வையும் மட்டுமே குறிக்கோளாகக்கொண்டு வாழ்பவன்-மற்றெல்லோரையும்விட திகமாகத் தனக்கே சகல நலன்களும் செல்வங்களும், முத்தியும் வாய்க்க வேண்டும் என்ற பொறாமை உள்ளத்தோடு வாழ்பவன் - சுயநலக்காரன். அவன் எல்லாக் கோயில்களுக்கும் சென்று க்ஷேத்ராடனம் செய்திருப்பினும், சிறுத்தையுடல் போலத் தன்னுடம்பு எல்லாம் நீறு பூசித் திலகம் தீட்டித் திரியினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகியுள்ளவனே ஆகிறான்.

தான் நரகத்திற்குச் செல்வதால், மற்றவர்களுக்கு நலன் உண்டாகும் என்றால்,மகிழ்வோடு நரகமும் செல்லத் தயாராக உள்ளவன் எவனோ, அவன் தான் சுயநலமே இல்லாத தூய்மையான அன்பு நிறைந்த சிவபக்தன்; சிவபெருமானது

(4ஆம் பக்கம் பார்க்க)

### பொய்யாமொழி



குறள்;
அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

பொருள்:
இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

# இஸ்லாமிய நற்சிந்தனை

பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் மரணத்துக்குப்பின்னர், பத்துலட்சம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் ''கலீபா'' ஆட்சியாளராக நியமிக்கப்பட்டவர்கள் ஹழரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள்.

உயர் பண்புகளைக் கொண்டிருந்த அவர்கள்



ஆட்சியில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவின.

பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் அன்று அவர்கள் ஆற்றிய உரை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகப் பிரசித்தமானது.

அதன் சுருக்கம் தரப்படுகின்றது!

''ஜனங்களே! உங்கள் ''கலீபா'' வாக ஆட்சியாளனாக இன்று நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். இறைவன் மீது ஆணையாக இப்பதவிக்காக நான் பிரயத்தனப் படவில்லை, ஆசைப்படவில்லை. பகிரங்கமாகவோ இரகசியமாகவோ, இப்பதவிக்காக முயற்சி செய்யவில்லை, இறைவனிடம் கேட்கவுமில்லை!

உங்கள் மத்தியில் குழப்பங்களும் பிரச்சினைகளும் தலைதூக்கலாம் என்ற அச்சமே இப்பதவியை என்னை ஏற்றுக்கொள்ளச் செய்தது.

இது என்னால் சுமக்க முடியாத சுமை! இறை உதவியின்றி என்னால் இதைச் செயற்படுத்த முடியாது.

இப்பதவியினால் உங்களைவிட உயர்ந்தவன் என்று நான் நினைக்கவில்லை. நான் நன்மை புரிந்தால் எனக்கு உதவி செய்யுங்கள், இன்றேல் தீமைபுரிந்தால் என்னை தடுத்து நிறுத்துங்கள், திருத்துங்கள்.

ஒவ்வொருவருடைய உரிமையும் பாதுகாக்கப்படும், பெற்றுக் கொடுக்கப்படும்! இறைவனுக்கும் அவன் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் நான் வழிப்பட்டு நடந்தால் என்னைப் பின்பற்றுங்கள் இல்லையேல் என்னைத் திருத்துங்கள்''

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவர்கள் உள்ளத்தில் இறையச்சம் ஆட்சி புரிந்ததால், அவர்கள் ஆட்சியில் தர்மம் எங்கும் ஒளிவீசியது. மக்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. நீதி நிலைநாட்டப்பட்டது. மக்கள் நிம்மதியடைந்தனர்.

தொகுப்பு:அகுமது கரீம் அக்பர் ஜின்னா

**வரலாற்றுக் காலம் முதல்**

# வடக்கு - கிழக்கு தமிழரின் பாரம்பரிய தாயகம்

> இந்திய அரசிடம் கையளிக்கப்பட்டு, தற்சமயம் இலங்கை அரசினால் பரிசிலனை செய்யப்பட்டு வரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனைகள் அடங்கிய திட்டத்தின் 3ஆவது பகுதி இன்று பிரசுரமாகிறது.

இணைப்பு - 1

[illegible] தாயகத்தின் முழுமை

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இருந்தே வடக்கு,கிழக்குமாகாணங்கள் தமிழ் பேசும் பகுதிகளாக அங்கீகரிக்கப்பட்டு வந்தன.

இலங்கையின் கரையோரப் பகுதிகளை பிரிட்டிஷார் கைப்பற்றிய சமயமும் இந்த நிலைதான் இருந்தது.

1779இல் குடியேற்ற அலுவலகத்துக்கு சேர் ஹியூ கிளெஹோர்ன் அறிக்கை ஒன்றை அனுப்பி இருந்தார்.

அவர் அந்த அறிக்கையில் கூறியிருந்ததாவது; ''பண்டைக் காலத்தில் இருந்து இரண்டு தேசிய இனங்களினால் தீவு பிரிக்கப்பட்டுள்ளது.

தெற்கு, மேற்குப் பகுதிகளில் வளவை ஆற்றில் இருந்து சிலாபம் வரை சிங்களவர்களும்,

வடக்கு - கிழக்கு மாவட்டங்களில் மலபார்களும் வாழ்ந்து வருகின்றனர் ''

(மலபார்கள் என்பது தமிழர்களையே குறிக்கின்றது ) — இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சியிலும், சுதந்திரம் பெற்ற பின்னரும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தனியாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேசக் காரியாதிகாரிகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள். உள்ளூராட்சி எழுதுவினைஞர் நியமனங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு என்று தனியாகவே இடம் பெற்று வந்தன.

### மொழிவாரி மாநிலம்

1972, 1978ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசமைப்புச் சட்டங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களை 'ஒரு மொழி பிரதேசமாக' அங்கீகரித்தன.

நீதிமன்றங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாக மொழியாக தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் இந்த அரசமைப்புச் சட்டங்களில் கூறப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பாரம்பரியமாக தமிழ் பேசும் மக்களுக்கு உரியன.

வடக்கு மாகாணத்தில் வாழ்பவர்களில் 97 சதவீதமானோர் தமிழ்பேசும் மக்கள்.

கிழக்கு மாகாண மக்கள் தொகையில் 75 சதவீதமானோரின் தாய்மொழி தமிழ்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்துப் பார்க்கும்போது 86 சதவீத மக்கள் தமிழ் பேசுபவர்.

இந்தியாவிலும்மொழிப் பிரச்சினைகள், மொழி வாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதன் மூலம் தீர்க்கப்பட்டன.

அதுபோன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதன் மூலம் மொழிவாரி மாநிலம் ஒன்றை உருவாக்குதல் வேண்டும்.

1957, 1960, 1965 ஆம் ஆண்டுகளில் தமிழர் தலைவர்களுக்கும் பெரிய சிங்கள அரசியல் கட்சிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்கள், கைச்சாத்தான ஒப்பந்தங்கள் எல்லாம் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம் என்ற அடிப்படையிலேயே இடம் பெற்றன.

### தாயகம்

வடக்கு - கிழக்கு மாகாணங்களை தமிழர் தாயகமாக பராமரிப்பதில் தான் தமிழ் மக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்குமான பாதுகாப்பு பிணைப் பிணைந்து உள்ளது.

ஒவ்வொரு வன்செயலின்போதும் பல்லாயிரக் கணக்கான தமிழர், அகதிகளாக வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வந்தனர். அங்கேயே நிரந்தரமாக வசிக்கவும் தலைப்பட்டனர்.

1958, 1977, 1981, 1983 வன்செயல்களின் போது அரசாங்கமே ஆயிரக் கணக்கானோரை கப்பல்களில் ஏற்றி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொண்டு வந்து இறக்கியது.

1977க்குப் பிறகு சிங்களப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழருக்கு எதிராக அடிக்கடி வன்செயல்கள் இடம் பெற்றன.

இதன் காரணமாக [illegible] பகுதிகளைச் சேர்ந்த [illegible] தமிழர்களும் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வந்த ஆயிரக் கணக்கான தமிழரும் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் நிரந்தரமாகக் குடியேறினர்.

### தமிழ் அகதிகள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் சிங்கள ஆயுதப்படையினரால் தாக்கப்படத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து தமிழர் தென் இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்லத் தொடங்கினர்.

1983க்கு முன்னர் தமிழ் அகதிகள் இந்தியாவுக்குப்போகவில்லை மற்ற ஏழுமாகாணங்களில் இருந்து வந்த தமிழ் அகதிகள் பாதுகாப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழக் கூடிய தான நிலை இருந்தது.

இந்தியாவில் உள்ள தமிழ் அகதிகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத்தான் இனித் திரும்பிப் போகமுடியும் அங்கு வைத்துத்தான் அவர்களுக்குப் பாதுகாப்பும், புனர்வாழ்வும் அளிக்கப்பட முடியும்.

இசுற்க இரண்டு மாகாணங்களையும் இணைத்து ஒரு மொழி மாநிலம் ஆக்கி அதன் நிர்வாகத்தைத் தமிழரின் கைகளில் ஒப்படைப்பது அத்தியாவசியம்.

இந்த அகதிகளில் குறிப்பிட்ட தொகையினர் 18க்கும் 30க்கும் இடைப்பட்ட இளைஞர்கள்.

திட்டமிட்ட ரீதியில் தமிழர் தாயகத்தில் இவர்களை மீளக்குடியமர்த்தி புனர்வாழ்வு அளிக்கப்படல் வேண்டும்.

ஒரு மாகாணத்துக்குள் இதைச் செய்யமுடியாது.

சிங்கள அரசாங்கம் ஒருக்காலும் இதைச் செய்யாது. அவர்கள் செய்வார்கள் என்று எண்ணுவது ஏமாற்றமாகவே முடியும்.

(நாளை தொடரும்)

## வயாவிளான் ஊடாக யாழ்ப்பாணம் வரை

### காலை பஸ்சேவை நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

பருத்தித்துறையில் இருந்து வயாவிளான் ஊடாக திருநெல்வேலி வழியாக யாழ்ப்பாணம் வரும் 764 ஆம் இலக்க பஸ்கள் இரண்டை தினமும் காலைச் சேவையில் ஈடுபடுத்தவும்.

துன்னாலை பிரஜைகள் குழு, வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையிடம் இவ்வாறு கோரியுள்ளது.

துன்னாலை பிரஜைகள் குழுத் தலைவர் திரு.ஏ.வி. தங்கராசா இதுசம்பந்தமாக மகஜர் ஒன்றை போக்குவரத்துச் சபை அதிகாரிகளுக்கு அனுப்பி உள்ளார்.

''இவ்வாறு சேவை நடைபெற்றால் வடமராட்சிப் பகுதியில் இருந்து பயணம் செய்யும் பல்கலைக்கழக மாணவர்கள், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்கள் ஆகிய பலருக்கு வசதியாக அமையும்.''

இவ்வாறு அம்மகஜரில் திரு. தங்கராசா குறிப்பிட்டு உள்ளார்.

## சமய சந்நிதிகளில்

### ஜெயந்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 10

யாழ்ப்பாணம் ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி ஜெயந்தி உற்சவம் இன்று (10-1-1986) நடைபெற உள்ளது.

காலை 9 மணிக்கு விஷேட அபிஷேகமும், ஆராதனையும்—

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Dilka Watch Works**
எமது தன்னிகரில்லா சேவையே
உங்கள் கடிகாரத்தினை நெறிப்படுத்தும்
கை, மேசை, சுவர் கடிகாரம், எலக்றோனிக் கடிகாரம்
எதுவானாலும் எம்மால் உங்களுக்கு
உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும்
**டில்கா வோச் வேக்ஸ்**
(பஸ் நிலைய எதிர் மேல்மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**உதயன்**
10-01-1986

வீடியோ ஒளிப்பதிவில்
உங்கள் தேவைகள் எதுவானாலும்
யாழ்நகரில் அதிவிசேட
VIDEO ஒளிப்பதிவிற்கு எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்
உங்கள் விருப்பமே எமது செயல் திறன்
**STUDIO DILKAH**
(பஸ் நிலைய எதிர் மேல் மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மழையால் கிழக்கில் 1¼ லட்சம் அகதிகள்

கொழும்பு, ஜன. 10

கிழக்கு மாகாணத்தில் மட்டும் வெள்ளம் காரணமாக சுமார் ஒன்றகால் லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர்.

பதுளை, பண்டாரவளை மற்றும் மலையகப் பகுதிகளில் இரண்டரை லட்சம் பேர் அகதிகளாக உள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து கடும் மழை பெய்து வருகிறது.

காரைதீவு, நிந்தவூர், அக்கரைப்பற்று ஆகிய இடங்களில் மக்கள் தாழ்ந்த பிரதேசங்களில் இருந்து தொடர்ந்து வெளியேறி வருகின்றனர்.

குளங்கள் உடைப்பெடுத்ததால் பலர் வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

## வித்தாரம்

எப்பிடிமுரளி! தடிமல் இப்போதைக்கு மாறுது போலை. மழையும் ஏதோ சொல்லுது.

யாழ்ப்பாணத்திலை என்ன மழை. கிழக்கிலை தான் பேய்மழை பெய்யுதப்பா. ஆயிரக் கணக்கிலை ஆக்கள் அகதிகளாகி இருக்கினமாம். வீடுகளை விட்டு வெளிக்கிட்டுக் கோயில்கள், பள்ளி கூடங்களிலை போய் இருக்கினமாம். நிவாரண வேலையளைச் செய்ய முடியாத அளவு மழை பெய்யுதெண்டாப் பாரேன்.

தைபிறக்கிறதுக்குஇன்னும் நாலு, ஐஞ்சு நாட்கள்தான் இருக்குது. மழை குறைஞ்சுகொண்டு போகவேண்டிய காலத்திலை இப்பதான் தொடங்குது.

அதுதான் கலியுகம் எண்டு சொல்லுறது. பருவகாலமும் இப்ப தலைகீழா மாறிப்போச்சு. மாறுமல் என்ன செய்யும்!

மனுஷன் இப்ப எந்தளவு மாறிபிட்டான். முந்திக் காட்டிலை இலைகுழை தரிச்ச காலத்திலையே இருக்கிறன்? வான வெளியிலை விஞ்ஞான வாணவேடிக்கையள் எல்லே செய்து காட்டிக்கொண்டு இருக்கிறன்.

மனுஷன் மாறின காலமும் மாறும்தானே ஆக்கத்துக்கும் காரணம் மனுஷன்தான். அழிவுக்கும் காரணம் அவன்தான்.

மழை சரியா வரயில்லை. பயிர் பச்சை செய்ய வழியில்லை எண்டு நாம் கூப்பாடு போடுறேம். மழைகாலம் தப்பிப் பெய்து வெள்ளப் பெருக்கு வந்தால் மழையை ஏசுகிறேம்.

இயற்கையின் சம நிலையைச் சரியா வைச்சிருக்க வேணுமெண்டு நினைக்கிறேமோ? இல்லை. காடுகளைக் கண்டபடி வெட்டுகிறேம். மரங்களை மனம்போன போக்கிலை தறிக்கிறேம். ஆறு பத்து மரத்தைத் தறிக்கையிக்கை ஒரு புதுக் கண்டையாவது வைச்சு உண்டாக்கிறேமோ, எண்டால் இல்லை.

எங்கடை தகப்பன், பேரன்மார் ஒரு தென்னை மரத்தை வைச்சாலும் அதைப் பிள்ளை எண்டு சொல்லி சரியாகத் தண்ணி ஊத்தி வளர்த்தினம், பராமரிச்சினம். அதுகள் முப்பது நாப்பது வருஷம் எண்டு நிண்டு சோடை போகாமல் காய்ச்சிதுகள்.

மழையைப் பழிசொல்லாமல் நாங்கள் மரத்தை வளக்கவேணும் அப்பா. ஒரு பூவரம் தடியை வெட்டுறது எண்டாலும் பருவம் பார்த்துத்தான் வெட்ட வேணும்.

ஓ, இதைச் சொல்லத்தான் ஞாபகம் வருகுது.

இப்ப மரங்களுக்கு மரண தண்டனை விதிக்கிற காலம் எல்லே! யாழ்ப்பாணத்து றோட்டுகளிலை உள்ள மரங்களுக்கு மரண தண்டனை விதிச்சாச்சாம். இப்ப மரங்களின்ரை பராமரிப்புக்குப் பொறுப்பானவை அப்பீல் செய்திருப்பதாகவும் தெரிய வந்திருக்கு.

பின் கம்பத் தண்டனை விதிக்கிற இடம்தானே நாங்கள் மரங்களுக்கு விதிச்சால் என்னெண்டு பாதுகாப்பாளர் நினைச்சிருப்பார்.

அங்கை தெற்கிலை மரம் வளர்ப்பு, மரம் பாதுகாப்பு எண்டு இயக்கங்கள் நடத்தி வருகிறார் பிரதமர். சுற்றுடல் சூழலைச் சுத்தமாக வைச்சிருக்கிற பொறுப்பும் அவருக்குத் தான்.

ஆறு இஞ்சை வடக்குக்கு உதுகள் எல்லாம் தேவை இல்லை எண்டு நினைக்கினம் போலை.

# திருமலை காவலில் இருந்த தமிழர் சூடுபட்டு மரணம்

திருகோணமலை, ஜன.10

திருகோணமலையில் கோட்டை இராணுவ முகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருதமிழர் துப்பாக்கிச்சூட்டுக்காயங்கள் காரணமாக மரணமானார்.

புதன்கிழமை காலை 8 மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

தப்பி ஓட முயற்சிக்கையில் சண்முகம் நடராசா (வயது 38) என்ற அந்த நபர் சுட்டுக் கொல்லப்பட்டார் என பாதுகாப்புப் படை வட்டாரங்கள் அறிவித்தன.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட்ட பின்னர், ஆயுதப் படையினரால் சடலம் எரிக்கப்பட்டது.

இறந்தவர், திருமலையில் உவர்மலைப்பகுதியில் வசித்துவந்தார். தொழில் சாரதி.

ஒரு மாதத்துக்கு முன்னர் தேடுதலின்போது கைதானார்.

## ரூபவாஹினி

10-01-1986
வெள்ளிக்கிழமை
மாலை

| | | |
|---|---|---|
| 5.00 | – | செய்திகள் |
| 5.15 | – | பாடசாலை விஞ்ஞானம் |
| 5.30 | – | மலரும் அரும்புகள் |
| 6.00 | – | பட்டர்பிளை ஐலண்ட் |
| 6.30 | – | செய்தி (தமிழ்) |
| 6.55 | – | ஸ்வரகங்கலன |
| 7.25 | – | குரங்கு — தொடர் |
| 8.00 | – | செய்திகள் (சிங்களம்) |
| 8.20 | – | குரங்கு — தொடர் |
| 9.00 | – | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9.25 | – | நடப்பு விவகாரம் |
| 9.45 | – | 'பெட்டர் லேற் தான் நெவ' ஆங்கிலத் திரைப்படம் |
| 11.45 | – | ஒளி பரப்பு முடிவு |

## மனத் தூய்.....

(3ஆம் பக்கத் தொடர்)

திருவருளுக்கும் ஏற்றவன்.

சுயநலமின்மையே உண்மையான சமயப் பற்றுக்குச் சான்று. ஒருவன் எவ்வளவுக்குத் தன்னலமின்றி பிறருக்கென வாழ்கிறனே, அந்த அளவுக்கு அவன் ஆன்மீக ஞானம் பெற்றவன; சிவபெருமான் அருகே இருப்பதற்கும் ஏற்றவன். அவன் படித்தவனாயினும், பாமரனாயினும் அறிந்தோ அறியாமலோ மற்ற எவரைக் காட்டிலும், சிவபெருமான் பக்கலிலே இருக்க அருகதையுள்ளவனாகிறன்.

They alone live who live for others, the rest are more dead than alive.

ஒவ்வொருவனும் சோம்பலை விடுத்து, குறிப்பிட்ட காலத்தில் ஜபமும், தியானமும் செய்யப் பழகவேண்டும்.

இது வேறை பகுதி, தங்கடை வேறை பகுதி எண்ட எண்ணம் அவைக்கு இருக்கயிக்கை எங்களுக்கு மட்டும் எப்பிடி?

கொண்டோடி

# பாதுகாப்பு படை மீதான தாக்குதல்கள்

## ஈ. பி. ஆர். எல். எவ் அறிவிப்பு

சென்னை, ஜன.9

இலங்கையில் பாதுகாப்புப் படையினர் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து ஈ. பி. ஆர். எல் எவ். சென்னையில் அறிவித்துள்ளது.

அந்த அறிவிப்பு வருமாறு:

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவாகிய ''மக்கள் விடுதலைப் படை'' 6–1–86இல் பிற்பகல் 3மணியளவில் வவுனியாவுக்கும்ஓமந்தைக்குமிடையில் ''பறநாட்டாங்கல்'' என்னுமிடத்தில் பாதுகாப்புப் படையினர் மீதான தாக்குதலை நடத்தியது.

இந்த நிலக் கண்ணிவெடித் தாக்குதலின் போது இராணுவ வாகனங்கள் சேதமடைந்ததோடு 14 இராணுவத்தினர் மரணமடைந்தார்கள். இவர்களுள் ஓர் இராணுவ அதிகாரியும் அடங்குவர். பல இராணுவத்தினர் காயமடைந்தனர்.

3–1–86இல் கிளிநொச்சியில் தருமபுரம் என்னுமிடத்தில் மக்கள் விடுதலைப் படையினரும் பாதுகாப்புப் படையினரும் நேரடியாக மோதினர்.

லொறியில் வந்த பாதுகாப்புப் படையினரும் ஜீப் வண்டியில் வந்த மக்கள் விடுதலைப் படையினரும் எதிர்பாராது சந்திக்கநேர்ந்தபோது இந்த மோதல் நடந்தது.

இந்த மோதலின் போது ஒரு கோப்ரல் உட்பட பாதுகாப்புப் படையினர் மூவர் படுகாயமடைந்தனர். காயமடைந்த பாதுகாப்புப் படையினர் கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் விடுதலைப்படையின் மற்றுமொரு தாக்குதல் 12–11–85 இல் மட்டுநகர் விமான நிலையத்துக்கு அருகில் இடம் பெற்றது.

இந்தக் கண்ணிவெடித் தாக்குதலில் 5 பொலீஸ் கமாண்டோக்கள் மரணமானார்கள். மூவர் படுகாயமடைந்தார்கள். ஆயுதம் கைப்பற்றப்படவில்லை. ஒரு ஜீப் வண்டி முற்றாகச் சேதமடைந்தது.

23–11–85இல் முல்லைத்தீவு கொக்குத் தொடுவாய் என்னுமிடத்தில் மக்கள் விடுதலைப் படை மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் 15 பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல் பாதுகாப்பு வலயத்துள் நடத்தப்பட்டது. மக்கள் விடுதலைப் படைவீரர் ஒருவர் இத் தாக்குதலின்போது காயமடைந்தார்.

யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து பாதுகாப்புப்படையினர் வெளிவருவதைத் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் மக்கள் விடுதலைப் படையினர் 5–1–86 பிற்பகல் 4 மணியளவில் நடத்திய 'மோட்டர்' தாக்குதலின் போது கோட்டையின் ''சென்ரி போஸ்ட்'' ஒன்று சேதமாக்கப்பட்டது.

## பிரிட்டிஷ்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் ஒரு கணக்கியலாளரும் பத்திரிகையாளரும் கூட.

வெஸ்லன்ட் ஹெலிக்கொப்டர் நிறுவனம் பற்றிய தகவல்களை தனது அனுமதியுடனேயேவெளியிட வேண்டும் என்று பிரதமர் தட்சர் தெரிவித்த கருத்தை அமைச்சர் மைக்கல் ஹெசல்ரைன் ஏற்றுக்கொள்ளாமல் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்து வெளி நடப்புச் செய்தார்.

# இன்டர்சிட்டி தாமதம்

யாழ்ப்பாணம், ஜன 10

யாழ் நகரில் இருந்து நேற்று முன்தினம் புகன் புறப்பட்டுச் சென்ற இன்டர் சிட்டி, ஒரு மணித்தியாலம் தாமதமாகவே கொழும்பு போய்ச் சேர்ந்தது.

கல்கமுவ என்னும் இடத்தில் தண்டவாளத்தில் பிஷ்பிளேட்டுக்கள் கழற்றப்பட்டிருந்ததே இத்தாமதத்திற்குக் காரணம் என்று கூறப்பட்டது.

## விளையாட்டரங்கு

# சுன்னாகத்தில் விளையாட்டு விழா 80 கழகங்கள் பங்கு பற்றின

— சுன்னாகம் செய்தியாளர்:- சபா. புஷ்பநாதன் —

சுன்னாகம், ஜன. 10

சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் ஒன்பதாவது நிறைவையொட்டி அண்மையில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் எண்பது விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றிச் சிறப்பித்தன.

நீண்ட நாட்களின் பின் அப்பகுதியில் விளையாட்டு ரசிகர்கள் ரசனைக்கு விருந்தளிக்கும் பல்வேறு ஆட்டங்கள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று முடிந்தன.

### உதைபந்தாட்டம்

ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழக அணி சாம்பியனானது.

சென் மேரிஸ் அணி இறுதியாட்டத்தில் ஊரெழு பறக்கும் றோயல் விளையாட்டுக் கழக அணியை 4-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

இந்த ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது. ஆட்ட இறுதி நேரத்தில் இரு அணிகளும் ஒரே எண்ணிக்கையான கோல்களைப் போட்டிருந்ததால் மேலதிக 10 நிமிட ஆட்டம் அனுமதிக்கப்பட்டது.

இந்த மேலதிக நேர ஆட்டத்தில்தான் சென் மேரிஸ் 2 கோல்களைப் போட்டு வெற்றிவாகை சூடியது.

இந்த ஆட்டத்திற்கு திரு. என்ரி. இராஜேந்திரா மத்தியஸ்தம் வகித்தார்.

ஆட்டம் சுன்னாகம் பூதராயர் கோவில் முன்றலில் சிங்கமாப்பாணர் அரங்கில் நடைபெற்றது.

### ஏனைய போட்டிகள்

இதே விளையாட்டு விழாவின் இருபது ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இணுவில் கலை ஒலி கழக அணி தெல்லிப்பளை கிரஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை தோற்கடித்துச் சாம்பியனாகியது.

நவீன நான்கு பேர் ஆடும் மட்டுப்படுத்தப்பட்ட–முப்பது நிமிட–கரபந்தாட்டப் போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக அணி சாம்பியனானது.

வளர்மதி அணி இறுதியாட்டத்தில் உடுவில் லயன் – ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்தது.

## அராலியில் விளையாட்டுப் போட்டிகள்

அராலி ஜன, 10

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு அராலி மாவத்தை விளையாட்டுக்கழகம் இவ்வருடமும் உழவர் விழா ஒன்றை நடத்தத் தீர்மானித்திருக்கிறது.

இந்த விழாவில் பல சுதேச, தேசிய விளையாட்டுக்கள் இடம் பெறுகின்றன.

கைக்கொடி மாட்டுச் சவாரி, உதைப்பந்தாட்டம், மதுவான சைக்கிள் ஓட்டம், விநோத உடைப்போட்டி, மெய்வல்லுநர் போட்டி உட்பட பல்வேறு போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கலந்து கொள்கிறர்.

# சித்திரவதையை நிறுத்த அவசர...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விப்புச் சபையின் செயலகத்தினுல் தயாரிக்கப்பட்டது.

### நன்கு ஆராய்வோம்

மன்னிப்புச்சபை அதிகாரிகளால் பெறப்படும் தகவல்கள் நன்கு ஆராயப்பட்ட பின்னரே அறிக்கையில் இடம் பெற்றன.

மன்னிப்புச் சபையின் இலங்கைப் பிரிவோ, தென் ஆசிய வெளியீட்டுப் பிரிவோ இந்த அறிக்கையைத் தயாரிப்பதிலோ, அச்சிடுவதிலோ, விநியோகிப்பதிலோ சம்பந்தப்படுவதில்லை. இலங்கையில் இடம்பெற்ற சித்திரவதையால் பாதிக்கப்பட்ட மூன்று பேரை, இலங்கைக்கு வெளியில் வைத்து எமது வைத்திய நிபுணர்கள் பரிசோதித்தனர்.

### உண்மை இருப்பது அறியப்பட்டது

சித்திரவதைக் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கின்றன என்று வைத்திய நிபுணர்கள் கண்டறிந்தனர்.

சாட்சியமளித்தவர்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை மன்னிப்புச் சபைக்கு உண்டு. அதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தந்த சாட்சியங்களின் பிரதிகளைச் சபை இலங்கை அரசுக்கு அனுப்பவில்லை.

ஆனாலும் சம்பந்தப்பட்டவர்களின் அனுமதியைப் பெற்று அவர்களின் சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்பிக்க சர்வதேச மன்னிப்புச்சபை விரும்புகின்றது.

அரசாங்கம் நியமிக்கும் பாரபட்சமற்ற, சுதந்திரமான விசாரணைக் குழு ஒன்றின் முன்னலேயே அச்சத்தியக் கடதாசிகளை மன்னிப்புச் சபை சமர்ப்பிக்கும்.

### இலங்கை அரசின் குற்றச்சாட்டு

''பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள்'' பற்றி மன்னிப்புச்சபை ஒன்றும் கூறுவது இல்லை என இலங்கை அரசுப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

கொலை, சித்திரவதைகளில் ஈடுபடும் எல்லாத் தாப்பினரையும் மன்னிப்புச்சபை கண்டித்தே வந்துள்ளது.

அப்படியானவர்களை நீதி முன் நிறுத்துவதற்கு முன்னர் அரசாங்கமும் சர்வதேச மனித உரிமை சாசனத்துக்கு இணக்கமாகச் செயல்பட வேண்டும்.

மக்களை சித்திரவதை, துன்புறுத்தல்களில் இருந்து காப்பாற்றுவதாக அரசாங்கங்கள் பிரதிக்ஞை எடுத்துள்ளன.

### இலங்கை தானுக முன்வந்தது

இலங்கை அரசும் ஐ. நா. மனித உரிமைச் சாசனத்தில் தானுக முன்வந்து கையொப்பமிட்டு இதை உறுதி செய்தது.

அதன் காரணமாகத்தான் சித்திரவதை, துன்புறுத்தல்களை நிறுத்தும்படி அரசாங்கங்களுக்கு மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்து வருகின்றது.

இவ்வாறு சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு அனுப்பிய வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளது.

# பாப்பரசர் தமிழ் பகுதிகளுக்கு வரவேண்டும்

## இல்லையேல் இலங்கைக்கே வரக்கூடாது வத்திக்கான் தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.10

மக்களின் இரத்தக்கண்ணீரைத் துடைக்க பரிசுத்த பாப்பரசர் தமிழ்ப் பகுதிகளுக்கும் விஜயம் செய்ய வேண்டும்.

அப்படி விஜயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டால் இலங்கைக்கே விஜயம் செய்ய வேண்டாம்.

இப்படி திரு. ஆசீர்வாதம் ஹென்றி வத்திக்கானின் இலங்கைத்தூதுவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ் ஆயர் வ தியோகுப்பிள்ளை ஆண்டகை ஊடாக இம்மாஜரைவத்திக்கான் தூதுவருக்கு இவர் அனுப்பிவைத்துள்ளார்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள கத்தோலிக்கரும் இந்துக்களும் இன்று காடுகள், கழனிகள், பாடசாலைகள், தேவாலயங்கள், கோயில்கள், பள்ளிவாசல்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களின் இரத்தக் கண்ணீரைத் துடைத்தெறிய பரிசுத்த பாப்பரசர் தமிழ்ப் பகுதிகளுக்கும் விஜயம் செய்ய வேண்டும.

அப்படி முடியா விட்டால் இந்தியப் பிரதமர் கூறியதுபோல் இனப் பிரச்சினை தீரும்வரை ஸ்ரீ லங்காவுக்கு விஜயம் செய்வதை ஒத்திப் போடுங்கள்.

இப்படி திரு. ஆசீர்வாதம் ஹென்றி தமது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

# யாழ். மாநகர சபைக்கு புதிய செயலகம் தேவையா?

## கைவிடும்படி கேட்கிறது வரியிறுப்பாளர் கழகம்

யாழ்ப்பாணம், ஜன. 10

பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து யாழ் மாநகர சபைக்கு புதிய செயலகக் கட்டடம் நிறுவும் திட்டத்தைக் கைவிடும்படி, யாழ். மாநகர சபை வரியிறுப்பாளர் கழகம் ஆணையாளரைக் கேட்டுள்ளது.

வரியிறுப்பாளர் கழகத் தலைவர் திரு. சு. செ. மகாதேவா, செயலாளர் திரு. மு. மகாலிங்கம் ஆகியோர் கையொப்பம் இட்டு மாநகர ஆணையாளருக்கு இந்த வேண்டுகோளை அனுப்பி வைத்துள்ளனர்.

புதிய செயலகக் கட்டடம் தற்காலிகமானதாக இருப்பின் சொந்தமான கட்டடங்களின் நிலைமை என்ன என்பது தெளிவாக்கப்படவில்லை.

புதிய செயலகத் திட்டம் தற்காலிகமானது என்றால் இதற்கான பண விரையத்துக்கு யார் பொறுப்பாளி?

மக்களுடைய கருத்துக்கள் முறைப்படி அறியப் [illegible] நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டத்தின் எதிர் விளைவுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டதா?

மக்கள் நலனுக்குரிய அத்தியாவசிய சேவைகள் புறக்கணிக்கப்பட்டு சீரழிந்து வரும் வேளையில் புதிய செயலகக் கட்டடம் கட்ட பணம் செலவழிக்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும்.

இடவசதி போதாமையால் பாஷையூரில் விளையாட்டு மைதானம் அமைக்கும் திட்டமும் கைவிடப்படவேண்டும்.

இப்படி யாழ். மாநகர சபை வரியிறுப்பாளர் கழகம் ஆணையாளரைக் கேட்டுள்ளது.

## பேச்சுக்கு ஏற்ற....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வாய்ப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ நிலைமை சீரடைந்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இராணுவ நிலைமை சீரடைவதற்கு திரு. லலித் தெரிவித்த நான்கு காரணங்கள் வருமாறு:-

1. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பொலீஸ், இராணுவ நிலையங்களைத் தாக்குவதற்கும் போராளிகள் அண்மையில் முயற்சிகள் மேற்கொண்டனர். ஆனுல் அவர்கள் வெற்றி பெறவில்லை. தங்களால் இராணுவத்தை - அரசாங்கத்தை எதிர்த்துப் போராட முடியாது என அவர்கள் உணர்ந்து விட்டனர்.

2. தமிழ்ப் பகுதி வட்டாரங்களில் இருந்து போராளிகளின் நடவடிக்கைகள் குறித்து தகவல்கள் கிடைக்கத் தொடங்கியுள்ளன.

3. வடக்கு - கிழக்கு இணைப்பைத் தாம் விரும்பவில்லை என்று கிழக்கு மாகாண மக்கள் தெளிவுபடுத்தி விட்டனர்.

4. வடக்குப் பகுதி மக்கள் மனதில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. அவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குச் சார்பில்லை என்றுலும் தமது ''பொடியன்'' கள் தங்களை ஏமாற்றுகிறுர்கள் என உணருகிறுர்கள்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷ்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2ஆம் ஒழுங்கை. மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 10-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org